சருவ சன செபம்

(2-ம் பதிப்பு)

UNIVERSAL PRAYER

ராவ் ஸாஹிப்

வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.

முதற் பதிப்பு 1934. பிரதிகள் 1000.

இரண்டாம் பதிப்பு 1939.
'அன்பின் ஆற்றல்' என்ற
கட்டுரையுடன். } பிரதிகள் 6000.

விலை: காலணா.

சருவ சன செபம்

எவ்வேந் நாட்டினர், எவ்வெவ் வினத்தினர்,
எவ்வெம் மதத்தின† ரேனினும், ஆண்
பெண்ணெனும்
இருபா லினர்க்கும் ஏற்ற பிரார்த்தனை ;—

சம்பத்துராய சயினரின் "எதிரிடைகள் இசைவுறுதல்" ('Confluence of Opposites' by Champat Rai Jain) என்னும் நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றியது. இதன் பகுதிகள் சென்னைப் பல்கலைக் கழகப் பரீக்ஷைப் பாடப் புத்தகங்கள் இரண்டில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

*†உண்மையி னும்முய ரொருமத மும்மிலை:
அனைத்துண் மையினுக் களவிலை யாதலால்,
உண்மை அனைத்தும் உடைய மதம் இலை;
உண்மை ஒன்றும உறுமத மும்மிலை;
எம்மதம் எவ்வள வுண்மையொ டியையுமோ,
அம்மதம் அவ்வள வுயர்வின தாமால்;
மெய்யர் இவர்,பொய் வேடத் தினர்இவர்,
என்ன, ஐயுற வின்றி அறியுமா (று),
உள்ளத் துள்ளதை உணரவல் லாக்கலால்,
மறறவர் உண்மை மதம்அறி வரிதால்;
மனிதனை மதத்தால் மதியா தொழுக்கால்
மதித்தலே உண்மை மதிப்பா குவகாண்:
'கருமமே யல்லது பிறிதென் கண்ட' தென் (று;
உரைசெய் கம்பன் உட்கருத் திதுவே.*

ஒவ்வொர்கா ரணமும் உரியகா ரியத்தைச்
செய்தே தீரச் செய்குவ தெதுவோ,
நன்மையை நினைவார் நவில்வார் புரிவார்
நன்மையின் பயனை நண்ணச் செய்வதும்,
தீமையை உன்னுவார் செப்புவார் செய்வார்
தீமையின் பயனுறச் செய்வதும் எதுவோ,
அதனை[1] அகத்துள் அகலா தமைத்தே,
எண்ணுதல் இயம்புதல் இயற்றுத
லென்னும்
முச்செயல் களினும் முயல்வே னாக. (௬)

பசுக்கொலை செய்தப் பசுத்தோ லாற்செய்
செருப்பைத் தானம் செய்தல் போலத்,
தீயஎவ் வகையினும் தேடிய பொருளாற்
செய்யும்எத் தன்மமும் திண்ணமா
அதன்மமே:
அதனால்,

1 பிரகிருதியென்னும் இயற்கை, நியதி, ஊழ், தரும சக்கரம், கடவுள் முதலிய பொருள்களுள் அவரவர் கொள்கைக் கிசைந்த பொருளைக் குறித்தது.

அறமுறை திறம்பி[1] அறஞ்செயே னாக;
அறநெறி வழீஇப்[2] பொருள் ஆக்கே னாக;
அறவழி யன்றி இன் படையே னாக.
என்றும்,
நல்லோர் இணக்கமே நான் இணங் கிடுக;
நல்லோர் நினைவே நான் நினைந் திடுக;
நல்லோர் உரையே நான் உரைத் திடுக;
நல்லோர் நடையே நான் நடந் திடுக;
பிறர்நன் முறைகளைப் பேணிஎன்
முறைகளா
ஆக்குதற் காசை அடைவே னாக. (உஉ)

உயிர்களை வருத்தல் ஒழிவே னாக;
உயிர்போ மெனினு மெய்
உரைப்பே னாக;
களவினைக் கனவினும் கருதே னாக;
சூதா டெண்ணமும் துறப்பே[3] னாக;
மதியினை மயக்கிடும் மது முத லியவை
எதனையும் உட்கொளும் இழுக்கிலே னாக;
வாழ்க்கைத் துணைபா லன்றிமற் றவர்பாற்

1 தவறி. 2 வழுவி-தவறி. 3 வெறுத்து விடுவேன்.

காதல் உறுதல் கடிவே[1] னாக;
உயிரினும் மானம் ஓம்புவே[2] னாக;
இறப்பே னாயினும் இரவே னாக;
அயலவர் பொருளினை அவாவே[3] னாக;
அவர்கள்தம் வாழ்வுகண் டழுக்கறே[4] னாக;
அவர் செயும் நன்றியை அயர்த்திடே[5]
னாக;
முன்பு பின் பவர்பழி மொழியே னாக;
எங்கணும் அவர் புகழ் இயம்புவே னாக;
அவர்குறை காண்டலிற் குருடனே னாக;
அவர் மறை[6] கேட்டலிற் செவிடனே னாக;
அவர்க் கின்னா[7] கூறலில் ஊமனே னாக;
அவர்க் கூறு[8] செய்தலில் முடவனே னாக;
அவர்கேடு சூழ்தலில் அறிவிலே னாக;
எனைக் கெடுத் தவர்க்கும் நன் றியற்றுவே
னாக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னாக;

1 நீக்குவேன். 2 பாதுகாப்பேன். 3 விரும்பேன். 4 பொறாமை அடையேன். 5 மறவேன். 6 இரகசியம். 7 துன்பந்தருவன. 8 (அடித்தல், உதைத்தல் முதலிய) தீங்குகள்.

வெறுத்தவ ரெவரையும் விரும்புவே னாக;
ஒறுத்தவ[1] ருக்கும் உதவுவே னாக;
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே
னாக; *

1 வருத்தம் செய்தவர்.

புத்தன் புகன்றருள் பொருள்போதி
பொன்னுரை:—

பகையைப் பகையாற் பாற்ற முயலல்,
அழலை அழலால் அவித்தல் போலும்.
தழலை நீராற் றணித்தல் போல,
அன்பாற் பகையை ஆற்றலே ஏற்றதாம்.
பலத்தைக் கொண்டு பகைவனை வென்றோன்
உடலையே வென்றோன்; உளத்தைவென்
றோனலன்.
அன்பாற் பகைவனை ஆட்கொண் டவனோ,
உடலோ டுள்ளமும் ஒருங்காட் கொண்டோன்:
பலத்தால் வெல்லப் பட்ட பகைவன்,
சமயம் வாய்க்கில், சலஞ்சா திப்பான்:
அன்பால் வெலப்பட் டாளா னவனோ,
உற்றுழி உதவும் நற்றுணை ஆவனே.

(பாற்றுதல் - நீக்குதல்; அழித்தல்.
உற்றுழி - துன்புறு காலத்தில்.)

இப் பொன்னுரை, வெறுங்கொள்கையன்று, அனுபவ சித்தமானதென்பதை நன்கு விளக்கிக் காட்டும் உண்மை வரலாறென்று, இந்த நூலாசிரியர் எழுதித் 'தினமணி' 1937-ம் வருஷமலரில் வெளியானது இந்நூலிறுதியில் 'அன்பின் ஆற்றல்' என்ற தலைப்புடன் இணைக்கப் பெற்றிருப்பதைப் பார்க்க.

இத்தனை நல்லொழுக் கியைந்துளே
மென்று
பெருமைபா ராட்டிடும் பிழையிலே
ஞக: (சஈ)

வாழ்வு வரின் இறு மாந்திடே ஞக;
தாழ்வுறு மெனின் மனந் தளர்ந்திடே ஞக;
செய்தற் குரிய சிறிய கடனையும்,
எய்தற் குரிய பயனை எண் ணுமல்,
அப்பயன் அடைந்திட அவாவுவார்
யாரினும்
விருப்பொடு செய்திடும் விழுமியே[1]
ஞக: (ருரு)

என்னை எவரும் இகழினும் புகழினும்,
செல்வம் என்னைச் சேரினும் தீரினும்[2],
இன்றே இறக்கினும், என்றும் இருக்கினும்,
எவ்வெவ் இன்னையும் எய்துதற்
கெனினும்,

1 சிறப்புடையேன். 2 நீங்கினும்.

எவ்வெத் துன்பையும் இரித்தற்[1]
கெனினும்,
உண்மை வழுவி ஒழுகே னாக: (௬௧)

‘ உள்ளின்[2] தன்மை உண்மை’ யே ஆக,
‘ வாயின் தன்மை வாய்மை’ யே ஆக,
‘ மெய்யின் தன்மை மெய்ம்மை’ யே ஆக,
எண்ணம் சொல் செயல் யாவுமெய் ஆக,
உண்மையும் தோற்றமும் ஒன்றே ஆக,
ஒன்றையும் ஒளித்திடா துள்ளொடு
புறம்ஒத்
தியற்று காரியமெலாம் இயற்றுவே
னாக: (௬௮)

எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவி ஆற்றுவே[3] னாக;
என்னுடை[4] நன்மைபோல் யாவர் நன்
மைக்கும்
உழைத்திட ஊக்கம் உடையே னாக;

1 ஓட்டுதற்கு, 2 மனத்தின், 3 செய்வேன்.
4 என்னுடைய.

என்வாழ் நாளெலாம் இடையறு தினிதே
பிறர்க்கு நன் ருற்றிப் பெற்றிடும் இன்பால்
என்மனம் நிறைவினை எய்துவ தாக: (எடு)

எனை இகழ் வலியரை இறைஞ்சே[1] னுக;
ஆருயிர்[2] போவதற் கஞ்சே னுக;
அவ்வுயிர் வாழ்வினை அருவரே னுக;
வஞ்சகர், தீயர், தீ வழியிற் பிறராற்
செலுத்திடப் பட்டவர் இறத்தும்[3]
என்மனம்
கோபம் சிறிதும் கொள்ளா தாக;
இச்சிறு தன்மைய ரெவருட னேனும்,
எச் செய லெனினும்யான் இயற்றிட
நேருமேல்,
என்மனம் அமைதியை இழந்திடா
தாக: (அச)

வருத்தம் என் மனத்தினை வருத்திடா
தாக;

1 வணங்கேன். 2 அருமையான உயிர். 3 விஷயத்திலும்.

கடல்மலை வனம் இடு காடுகள் முதலா
வெருவிடு தனியிடம் மேவினே னாயினும்,
பாய்புலி பிடிக்கினும் பாம்பு கடிக்கினும்,
என்மனம் நடுக்கினை எய்திடா தாக;
அலையா உறுதியுற் றசைக்கவொண்
ணாய்
வச்சிர[1] வெற்பென வற்பினை[2] உற்று,
விருப்புறு பொருள்கள் விட்டு விலகினும்,
வெறுப்புறு பொருள்கள் மேவிச்
சேரினும்,
ஒழுக்கம் வழுக்கா[3] உளத்தேனாக. (௯௪)

ஓருயி ரும்துன் புற்றிடச் செய்யா
முதன்மை அறம்புவி முழுதும் பரம்புக.
துன்பம் எவ் வுயிரையும் துன்னா தொழிக.
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா உயிர்களும் இன்பம் எய்துக.
அனைத்துயிர் களும் மன அமைதியை
அடைக.

1 வயிர. 2 உறுதியை. 3 தவறாத.

நன்மை எங் கெங்குமே நண்ணி ஓங் கிடுக.
தீமை எவ் வெவருமே செயவொணா தாக.
அறிவைப் பெருக்கலால், அருஞ்செயல்
செயலால்,
பெறுதற் குரியநற் பேறுக ளெல்லாம்,
யாவரும் எய்தி இன்புடன் வாழ்க. (ாரு)

தம் தாய் போற்றாய் இல்லை; தம்
தாய்மொழி
எனத் தமக் காம்மொழி எம்மொழி
யும் மிலை
என்று தாய் மொழியை எவரும்
பேணுக. (ாஅ)

உடற்றுன் புளத்துயர் உயிரைவிட்
டொழிக..
பஞ்சமும் நோய்களும் பாரைவிட் டகல்க.
வேண்டிய பொழுதினில் வேண்டிய
அளவினில்
மிகாஅது குறையாது விண் மழை
பொழிக.
ஆள்வார் முறைபிற ழாமே ஆள்க.

நீதி பதிகள் நெறியில் நின்று
பேத மின்றி நீதி செய்க.
பற்பல மக்கட் பகுதியும் பகையற்
றொற்றுமை யுற்று நண் புடையராய்
வாழ்க. (௱௰௭)

கொலைகள வாதிய கொடுந்தொழி லலாத
எந்தத் தொழிலும் இழிவில தென்றும்,
தொழில்புரி பவர்மனத் தூய்மைக்
கியையத்
தொழில்தான் உயர்வினைத் துன்னிடு
மென்றும்,
அவரவர் தமக்கிசை வாம் தொழில்
செய்தல்
அறமா மென்றும், திறமா நம்பிக்
கல்வித் துறையிலோ, கைத்தொழில்
முறையிலோ,
எதனி லெனினும், இடைவிடா
துழைத்துப்
பிறந்த நாடு பெருமை அடையச்
சிறந்த செயல்கள் தம் திறமைக் கியன்றவா
றனைவரும் செய்குவா ராகி வாழ்க. (௱௨௮)

மண்முழு வதும் ஒரு மனையா, மண்வாழ்
மக்கட் டொகுதிஅம் மனைவளர் குடியா,
குணிப்பரு[1] நாடர் அக் குடியில் உள்ளாரா,
(ஒருகுடி உள்ளவர் ஒருவரோ டொருவர்
போரா டிடலொரு போது மின்றி
அன்பொடு வாழ்தல் அறநெறி
ஆதல்போல்,)
ஒருநாட் டினர் மற் றொருநாட் டினரோ
டமர்புரி வதை ஒழித் தன்பராய் வாழ்தல்
அறநெறி யென அறிந் தடைக நல்
வாழ்வே. (௱௩௭)

1 எண்ணரிய.

அன்பின் ஆற்றல்

(1937-தினமணி ஆண்டு மலரில் வெளியானது)

அறத்திற்கே அன்புசார் பென்ப, அறியார்
மறத்திற்கும் அஃதே துணை —திருவள்ளுவர்

அன்பே சிவம் —திருமூலர்

அன்பென்ப தொன்றின் தன்மை
அமரரும்* அறிந்த தன்றால் —கம்பர்

தன்னிடத்து அன்பில்லாத பிராணி இல்லை. அந்த அன்பு, தனக்கு அடுத்தபடியாக, முதலில் ஆணுக்குப் பெண்ணிடத்தும், பெண்ணுக்கு ஆணிடத்தும் காதலாகப் பரவுகிறது; பின்பு சந்ததிகளிடம் பிள்ளைப் பற்றாகப் †பரவுகின்றது.

அமரர் - தேவர். † பிள்ளைப் பற்று (Parental love) - பறவை மிருகம் முதலிய பிராணிகளுக்குக் குஞ்சு குட்டிகளிடத்தும், மனிதருக்குக் குழந்தைகளிடத்தும் உள்ள அன்பு.

முதலில் மனைவி மக்கள் முதலிய தொடர்புடையாரிடத்துச் செல்லும் அன்பு, பின்பு தொடர்பில்லாத மனிதரிடத்துச் செல்லும் போது, அருளென்றும் காருணியமென்றும் சொல்லப்படுகின்றது; மிருகங்கள் பறவைகள் முதலிய எல்லாப் பிராணிகளிடத்தும் செல்லும் போது, உயிர்களுக்கிரங்கலென்றும், ஜீவகாருண்யமென்றும் பெயர்பெறுகின்றது.

பிராணிகளிடத்திலும், மனிதர்களிடத்திலும் பொதுவாகக் காணப்படும் அன்பு, மனிதரிடம் எப்படி வளர்ந்திருக்கிறதென்பது கவனிக்கத் தக்கது.

அன்பு, மனைவியிடத்தும் மக்களிடத்தும் செலுத்தப்படுவதாகித் தன் வீட்டாரிடம் தொடங்கி, வரிசையாக, பக்கத்து வீட்டாரிடமும், தன் தெருவாரிடமும், தன் ஊராரிடமும், தூரத்தூராரிடமும், எல்லா ஊராருமடங்கிய நாட்டாரிடமும் பரவி நாட்டுப்பற்று ஆகின்றது. இதுவே, தேசாபிமானம் என்பது. இந்த அன்பு, எல்லாத் தேசத்தாரிடமும் பரவி ஸர்வ தேசாபிமான மாகின்றது. ஒருவன் எவ்வளவு ஆழமும் பரப்புமுள்ள அன்புடையானோ, அவ்வளவு உயர்வுடையோனாக, உலகத்தோர் அவனை

மதிக்கிறார்கள். ஒருவனுக்குள்ள தன்னலப் பற்றுக் குறைவும், பிறர் நல நாட்ட மிகுதியும் அவனுடைய உயர்வை அளந்துகாட்டும் அளவு கருவிகள்.

அன்பு, மனிதர்களிடம் செலுத்தப்படுவதோடு நில்லாமல், பிராணிகளிடத்தும் செலுத்தப்பட்டால், சிறந்ததாம். கடவுள் அந்தரியாமியாய்* எல்லா உடல்களையும் கோயில்களாகக் கொண்டிருத்தலால், மனிதருக்கும் பிராணிகளுக்கும் அன்புசெய்வோர், உண்மையாகக் கடவுளுக்கு அன்புசெய்வோராய் வீட்டை (- மோட்சத்தை) அடைகிறார்கள். இவ்வாறாக, அன்பு வீட்டிலே (- குடியிருக்கும் வாசஸ்தலத்திலே) தொடங்கி வீட்டிலே (- மோட்சத்திலே) முடிகின்றது.

இனி, அன்புசெய்தல், நம்பால் விருப்புடைய உறவினர் நட்பினர் திறத்திலும், விருப்பு வெறுப்பற்ற அந்நியர் திறத்திலும் உதவுதல் போல, வெறுப்புடைய பகைவர் திறத்திலும் உதவுகின்றதென்ற (இந்த வியாசத்தின் தலைப்பிற் குறித்த) குறட் கருத்து, பின் வரும் பிரமாண வாக்கியங்களினால் விளக்கமாம்.

அந்தரியாமி — உள்ளேயுள்ளவன்.

'பகையைப் பகையால் தணித்தல் முடியாது, தீயைத் தீயால் தணித்தல் முடியாதவாறுபோல; பகையை அன்பால் ஒழித்தல், தீயை நீரால் ஒழித்தல் போலத் தக்கமுறையாம்.

பலத்தினுற் பகைவனை வெல்வோன், பகைவனது உடலையே வென்றவனுவான்; பகைவனை அன்பால் வெல்வோனே, அவன் உடலோடு உள்ளத்தையும் வென்றவனுவான் : பலத்தால் வெல்லப்பட்ட பகைவன், சமயம் வாய்த்தால், கேடுசெய்வான்; அன்பால் வெல்லப்பட்ட பகைவனே, எக்காலத்தும் கேடுசெய்யான்.

அன்பால் வெல்லப்பட்ட பகைவன், எக்காலத்தும் கேடுசெய்யானுவதல்லாமல், ஆபத்துக் காலங்களில் அரிய உதவி புரிபவனுமாவான்'.* இவ்வாக்கியங்கள் உண்மையானவையென்பது, இதன் பின் வரும் வரலாற்றுல் தெரியலாகும்.

நமது தேசத்தில், மகமதியர் ஆட்சிக் காலத்தில், அரசாண்டவர்களுள்ளே, **பேபர்** சக்கரவர்த்தி, ஒருவர். அவர், குடிகளைப் பாதுகாக்கும் பணியைப் பரம சிரத்தையுடன் செய்துவந்தார்.

* கம்பராமாயண சாரம் அயோத்தியா காண்டம் **24-ம் பக்கம் பார்க்க.**

அவர், குடிகளின் யோக க்ஷேமங்களை நேராகத் தெரிந்துகொள்ளுதற்குத் தன் ராச்சியத்தில் பகிரங்கமாகச் சுற்றுப்பிரயாணம் செய்வதோடமையாமல், அந்தரங்கமாகத் தனியே, தமக்குத் தாமே துணையாய், தம்மை எவருமறியாதபடி வேடம்பூண்டு சஞ்சரித்தும் வந்தார்.

நினைவுக்கெட்டிய காலமெல்லாம் அந்நிய ராட்சியை அறியாது சுவாதீனராயிருந்த ராஜ புத்திரரென்னும் க்ஷத்திரிய ஜாதியாரைச் சேர்ந்த அதி தீவிர தேசபக்தனான வீரன் ஒருவன், தன் நாட்டை அந்நிய ஜாதியராளுகையினின்றும் மீளுகையுறச் செய்வதற்குப் பேபர் சக்கரவர்த்தியைக் கொல்வதே உபாயமெனத் துணிந்து, அதனைத் தன் ஆயுள் விரதமாகக் கொண்டிருந்தான். அவ்விரதத்தை நிறைவேற்றுதற்கு ஏற்ற சமயம் எப்போது வாய்க்கும் என்று கருதி, அச்சமயத்தைப் பலவருடங்களாக எதிர்பார்த்திருந்தான். அப்படியிருந்த காலத்தில், ஒருநாள், ஜனங்கள் திரள் திரளாகச் சஞ்சரித்துக்கொண்டிருந்த ஒரு தெருவூடே, மதங்கொண்ட யானை ஒன்று, வேகமாக வந்துகொண்டிருந்தது. அதைக்கண்ட ஜனங்கள், அஞ்சி, தெருவின் இருபக்கத் தோரங்களிலும் உயிர்தப்ப

ஓடி, ஒதுங்கி ஒடுங்கி, நடுங்கி நின்றார்கள். தெரு நடுவே, தவழவுந் தெரியாத ஒரு சிறு ஆதிதிராவிடக் குழந்தை இருந்தது. அதன் தாயுந் தந்தையும், தம்முயிர் தப்ப ஓடியபோது, அதனை மறந்து போயினர். போனவர், அதனை யானை அடுத்தபோது, எடுக்கத் துணியவில்லை. எல்லோரும், 'ஐயோ குழந்தை செத்ததே!' என்று கூவினார்கள். ஒருவரும் அதனைக் காக்க யாதும் செய்யவில்லை.

அக் குழந்தை, அடுத்த மூச்சு விட்டிடு முன் செத்திடுமென்ற தற்சமயத்தில், அதனை ஒருவன் திடீரெனப் பாய்ந்தெடுத்துச் சென்றான். அவன் பாய்ந்த விசையிலே, முக அடையாளம் அறியாதபடி மூடியிருந்த அவன் தலையணி கீழே விழுந்தது. விழவே, அந்த வீரனையுள்ளிட்ட எல்லோரும், ஆச்சரியத்தோடு, அவன் பேபர் சக்கரவர்த்தி என்று தெரியலானார்கள்.

உடனே, அவ்வீரன், சக்கரவர்த்தியிடம் சென்று, காலில் விழுந்து தொழுது, எழுந்து நின்று, 'ஆண்டவனே! எவரும் தீண்டாத ஏழைக் குழந்தையின் உயிரைக் காப்பதற்காக

ஆருயிர் போய்விடும் அபாயத்துக்குள்ளாகிய பரம காருண்ய மூர்த்தீ! சாக்ஷாத் கடவுளே போன்ற மகாத்துமாவான உம்மைக் கொல்வதே குறியாக, பல ஆண்டுகளாக, இரவும் பகலும் இடைவிடாது ஏற்ற சமயத்தை எதிர் பார்த்திருந்த மகா பாதகனான இந்தச் சண்டாளனை' என்று சொல்லித், தன் இடுப்பில் மறைத்துவைத்திருந்த கத்தியை எடுத்து நீட்டிக் குனிந்துகொண்டு, கழுத்தை நீட்டி, 'வெட்டி விடவேண்டும். ராசத் துரோகியை வெட்டுவது நீதியே. தன்னுயிரினும் மேலாக மன்னுயிரைக் காக்கும் உம்மைக் கொல்ல நினைத்திருந்தேனே என்ற எண்ணம் என் மனத்தைத் துன்புறுத்து வதை நான் பொறுக்கமுடியவில்லை. இந்தத் துன்பம் சாகுந் துன்பத்தினும் சகிக்கமுடியாததா யிருக்கிறது. ஆதலால், தாமதியாது என்னை வெட்டவேண்டும்' என்று மன்றாடி வேண்டினான்.

சக்கரவர்த்தி, அந்த வாளைத் தன் கையில் வாங்கி, 'நிமிர்ந்து நில், நான் சொல்வதைக் கேள், உன்னை என் மெய்காப்பாளர் தலைவனாக நியமிக்கின்றேன். என்னுயிரைக் கொல்லுதற் காக வைத்திருந்த வாளையே, என்னுயிரைக்

காப்பதற்கு வைத்துக்கொள்.' என்று சொல்லி அதைக் கொடுத்தார். பின்பு, அவர் நடத்திய யுத்தங்களில், அவருயிர்க்கு ஆபத்து நேர்ந்த சில சமயங்களில், அந்த வீரன், காத்து உதவி, அவருடைய ஓர் உயிரை வாங்கக் கருதியதற்கு மாறாக, அவருக்குப் பல உயிரைக் கொடுத்தானென்னும் படி காப்பாற்றினன். உயிரைக் கொல்லும் நஞ்சாயிருந்தவனைச் சாவாது காக்கும் சஞ்சீவியாக்கிய அன்பின் அபார ஆற்றலை ஆரே அறிவார்!

ராவ் ஸாஹிப்

வே. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.

இயற்றிய நூல்கள்

---

1. சுவர்க்க நீக்கம் முதற் காண்டம் 0 12 0

(*'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் ஆங்கில நூலிலிருந்து விருத்தப்பாவில் மொழிபெயர்த்தது.*)

சென்னை அரசியலாரால் பாடப் புத்தகமாக அங்கீகரிக்கப பெற்றது. சென் ஜார்ஜ் கெஜட், 24 *ஆகஸ்ட்* 97, 466-*ம் பக்கம்.*

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் :—

'இதில் (சுவர்க்க நீக்கத்தில்) உள்ள செய்யுள் நடையும் வசன நடையும் நிரம்ப நன்ருக இருக்கின்றன; இந்நூல் வேறு ஒரு பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருந்தும், படிக்குங் காலத்து அவ்வாறு தோன்ருமல் நடைவிசேடத்தால் நூதனமாகச் செய்யப்பட்ட **மூல நூல் போல** *விளங்கிப் பொருளை வருத்தமின்றி நன்கு புலப்படுத்துகின்றன.'*

டாக்டர் G. U. போப் ஐயரவர்கள் :—

'இந்நூலின் முதற்பகுதி முற்றுப்பெற்றிருக்குந் தன்மையைப்பற்றி மனப்பூர்வமான துதி

மொழிகளன்றி வேறொன்றும் கூற இடமில்லை. மொழிபெயர்த்தவர் தாம் செய்யப்புகுந்த அரிய வேலையைச் செய்யத் தகுதியுள்ளவர் என்பதை நிரூபித்தற்கு நூலிலிருந்து இங்கு உதாரணங்கள் எடுத்துக் காட்டல் கூடியதன்று. ஆயினும், இம் மொழிபெயர்ப்பை அதிநுட்பமாகக் கவனஞ் செலுத்தி ஆராய்ச்சி செய்த யாம், மொழி பெயர்த்தவர் மூலப்பெருங் காவியத்துக்கிணங்க முட்டுப்பாடின்றி ஒழுகும் இனிய தமிழ்க்கவிகள் அமைத்ததில், மிக அதிகமான-மெய்யாகவே ஆச்சரியகரமான - சித்தியடைந்திருக்கிறாரென்று கூறக்கடவேம்.' (மொழிபெயர்ப்பு) டொக்டர் போப்பையர் தமது ஆயுட்காலவேலையாகக்கொண்டு இயற்றி முற்றுப் பெறுவித்த **திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்புப்** பெருநூல் முன்னுரையில் இந் நூலைப்பற்றி நன்கு மதித்துக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

2. **கோம்பி விருத்தம் (2-ம் பதிப்பு)** 0 8 0

(**சென்னைச் சர்வகலாசாலை** 1934-ம் வருஷத்து இண்டர்மீடியேற்றுப் பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.)

மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்:—

'இதில் (கோம்பி விருத்தத்துள்) அமைந்துள்ள **சொல் நயமும், பொருள் நயமும் மிகப் பாராட்டற்பாலன.** *இதைப் படிக்கும்பொழுது இடையிலே வைத்துவிட்டு வேறொன்றைச் செய்வதற்கு எனக்கு மனம் வரவில்லை.'*

ராய்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.

'கோம்பி விருத்தம் மெய்யாகவே **என் மனத்துக்கு விருந்தாகியது.'**

3. **நெல்லைச் சிலேடை வெண்பா:**
(2-ம் பதிப்பு) 0 6 0

(*இதிற் சில வெண்பாக்கள்* **சென்னைச் சர்வ கலாசாலை** 1936-*ம் வருஷத்து* B. A. *பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.*)

மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்கள்: —

'திரிபும் சிலேடையும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால் சிறிது ஊன்றி நோக்கில் பொருள் காண்டல் எளிதே. பொருள்

புலப்பட்டவுடன் மனத்து எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காண்டல் அரிதாம். நெல்லை என்னும் சொல்லை ஆசாக வைத்து நூறு சிலேடை கூறுதல் மிகக்கொண்டாடற்பாற்று. செய்யுளியற்றும் வன்மையுடையார் இதன் திறங் கண்டு பிரமிப்பது திண்ணம். இதற்கு உரையும் இருக்கின்றது.'

4. இந்து தேசத்துக் கால்நடைக்கர்ரர் புஸ்தகம் 2 0 0

(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தது.)

5. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம்.

(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தது; கவர்ண்மென்றால் பிரசுரிக்கப்பட்டது. சென்னைக் கவர்ண்மென்று அச்சுக்கூடம் சூப்பிரிண்டன்டுக்கு எழுதிப் பெறலாம்.)

6. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய ஜாதி வரலாறும் (2ம் பதிப்பு) 0 6 0

7. கல்வி விளக்கம் முதற் பாகம் 1 0 0

ஸ்பென்ஸர்ஸ் எஜுகேஷன் என்ற ஆங்கில நூலிலிருந்து வெ. ப. சுப்பிரமணிய முதலியார், S. V. கள்ளபிரான் பிள்ளை, B. A., அப்பாவு பிள்ளை, L. M. & S. ஆகிய மூவர்களும் மொழிபெயர்த்தது.

8. ஜான் மில்டனர் சரித்திரம் 0 4 0

(மேற்குறித்த சுவர்க்க நீக்கம் முதற் காண்டத்தின் ஒரு பகுதி: 1911-ம் வருஷத்து இண்டர் மீடியேற்றுப் பரீக்ஷா பாடப்புத்தகம்.)

9. காலிநடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்தலும் அதன் உபயோகங்களும். 0 1 0

10. சருவ சன கேபம் 0 1 0

டெமிவான பதிப்பு, 'அன்பின் ஆற்றல்' என்ற கட்டுரையுடன் 0 0 3

சென்னைச் சர்வகலாசாலை 1937—1938-ம் ஞூத்து எஸ். எஸ். எல். ஸி., இண்டர்மீடியேற்றுப் பரீக்ஷா பாடப் புத்தகங்களிற் சேர்ந்தது.

கம்பராமாயண சாரம்:

இந்நூல் 'கம்பராமாயண இன்கவித் திரட்டு' என்ற பெயருடன் செந்தமிழில் வெளிவந்த

காலத்திற் கிடைத்த நிருபங்களுள் இரண்டி லுள்ள அபிப்பிராயங்கள்:

(1) ஸ்ரீ C. V. கிருஷ்ணஸ்வாமி அய்யாவர்கள், B. A., B. L., (Retired District Judge) :-

'இன்றயதினம் எனக்குக் கிடைத்த "செந்தமிழ்" 21-ம் தொகுதி 1-ம் பகுதியில், நீங்கள் எழுதியிருக்கிற "'கம்பராமாயண இன்கவித் திரட்" டின் முன்னுரையைப் படித்து வெகு ஆனந்தமடைந்தேன். நேற்றிரவு இவ்வூர் ஆனந்த நடராஜகான சபையின் முதல் வருடாந்தக் கொண்டாட்டச் சபையில், நான் அவைத் தலைமை வகித்தேன்......... என் முடிவுரையில் கம்பராமாயணம் வெகு மேன்மையான காவியமாயிருந்தபோதிலும், அது வெகு விரிவாக இருப்பதினால் இக் காலத்தில் தமிழபிமானிகளும் படித்து ஆனந்திக்கச் சாவகாசமில்லை என்றும்,- அந்தப் பெரிய காவியத்தில் உள்ள இன்கவிகளை, ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் மகாகவியின் கவிகள் "Beauties of Shakespeare" என்று தேர்ந்தெடுத்துப் பதிப்பித்ததுபோல், பதிப்பிக்கவேண்டுமென்றும், இந்த சத்கருமத்தைச் செய்யும்படி ஈச னருள்புரிய வேண்டுமென்றும் நடராஜாவை

பிரார்த்தித்தேன். இவ்வளவு சீக்கிரம் என் பிரார்த்தனை நிறைவேறுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. தாங்கள் எத்தனித்த காரியம் வெகு மெச்சத்தக்கது. இனி ஒவ்வொரு மாதமும் "செந்தமிழ்" பத்திரிகையை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருப்பேன். சர்வேஸ்வரன் தங்களேயும், தாங்களெடுத்துக்கொண்ட காரியத்தையும் அநுக்கிரகிப்பாரென்று நம்புகிறேன். தங்களை யெனக்கு முன் தெரியாத போதிலும் தங்களுடைய நன் முயற்சியினால் ஆனந்தப்பட்டு எழுதினேன்.'

4—1—1923.

(2) **மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியர் பிரமஶ்ரீ திருநாராயணையங்காரவர்கள்:**

'கம்பராமாயண இன்கவித் திரட்டைப் பற்றி எனக்குண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதனை நான் தங்களுக்குத் தெரிவித்தால் முகமனென்றெண்ணக் கூடுமோ என்று ஐயமுடையவனாகி இதுகாறு மெழுதாதிருந்தேன். பல பிரதிகளை ஒப்புநோக்கி நன்கு பரிசோதித்தெழுதப் பெறுதலால் பல சுத்தமான பாடங்களும், பொருணயங்களும் நன்கு புலப்படுத்தப்படுகின்றன.

தொடர் மொழிகளுக்கு இடையிடையே இசையெச்சத்தானும், பிற குறிப்புக்களானும் விரித்துக் காட்டவேண்டிய சொற்களை இரு பிறைக் குறிகளுக்கிடையே அமைத் தெழுதி யிருப்பதை யுற்றுநோக்குந் தோறும் உள்ளம் களிப்புறுகின்றது. **காவியச்சுவை நுகர விரும்பும் ஒரோருவரும் தங்கள் உரைநயங் கண்டு களியாதிரார்.** இக்காலத்துச் சிலர் போலத் தத்தம் கொள்கைகளை நூலிடை நுழைக்க விரும்பாது கவி கருதிய கருத்தெதுவோ அதனையே புலப்படுத்திச் செல்லும் தங்கள் பொது நோக்குடைமையும் புலமைத் திறமையும் பாராட்டத்தக்கன. இத்தகைய புத்துரையை **முற்றுவித்துப் புத்தக நடிமாகப் பதித்துதவி னுல்** அது **தமிழ் நாடு செய்த தவப்பயனென்** றெண்ணத்தகும்.' 2—2—1926.

11.	**பாலகாண்டம்**	ராப்பர்	1	10	0
		காலிகோ	2	0	0
12-	**அயோத்தியாகாண்டம்**	ராப்பர்	1	6	0
		காலிகோ	1	12	0
13.	**ஆரணிய காண்டம்**	ராப்பர்	1	6	0
		காலிகோ	1	12	0

11-ம் 12, 13-ம் முறையே இலங்கையிலும் சென்னை மாகாணத்திலும் டீச்சர் சர்டிபிகேட் பரீக்ஷைப் பாடங்களாக நியமிக்கப்பெற்றவை.

14. கிட்கிந்தா காண்டம்	ராப்பர்	1	6	0
	காலிகோ	1	12	0
15. சுந்தர காண்டம்	ராப்பர்	1	10	0
	காலிகோ	2	0	0
16. திருவாவடுதுறை அம்பலவாண தேசிக மாலை		0	0	9
17. தனிக்கவித்திரட்டு	(அச்சில்)			
18. அகலிகை வெண்பா (மூன்றாம் பதிப்பு)	ராப்பர்	0	10	0
	காலிகோ	1	0	0

பிரமஸ்ரீ மகா மகோபாத்தியாய டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் 3—1—1919-ல் எழுதியது:—

'இந்த (அகலிகை வெண்பா) நூலமைப்பு, இதுவரையில் தமிழில் காணப்படாத பல வகைச் சுவைகளோடு விளங்கித் தங்கள் புகழை எக் காலத்தும் நிலைநிறுத்துமென்று எண்ணுகிறேன்.'

ஷெயார் 4—12—1919-ல் எழுதியது:— 'முன்பு எழுதியபடி அகலிகை வெண்பாவை முற்றும் மெல்லப் படித்துப் பூர்த்திசெய்தேன். ரசபுஞ்சமாக இருக்கின்றது. மெல்லத்தான் படிக்கவேண்டும். தமிழ்ப்பாஷையை நன்றாகக் கற்றவர்கள் இதுவரையில் எதிர்பாராத ஓர் ஆனந்தத்தை இதனால் அடைவார்களென்று நிச்சயிக்கிறேன். இஙஙனஞ் செய்யக் கிடைத்தது பெரும் புண்ணியப்பயனே' (அடிக்கீற்று, ஐயரவர்களுடையது.)

ஷெயார் 24—12—1919ல் எழுதியது :— 'இதுபோன்ற அழகிய நூல் கிடைத்தற்கரியதென்பதே எனது அபிப்பிராயம்.'

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர், ஸேது ஸமஸ்தான மகா வித்வான் பாஷா கவிசேகரர், பிரமஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் ஷெ நூலுக்கு அளித்த முகவுரையில் கூறியிருப்பது :— 'இந்நூல் நுனியினின்று அடிவரை கரும்பு தின்றற்போல மேன்மேற் சுவை மிக்கு நிலவுவது என்று அறியலாகும்......இவ்வினிய நூல் பன்னெறியானும் கற்றோர்க்குப்பெருவிருந்தாதல் ஒருதலை'

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் புர பஸர், மக-ா-ா-ஸ்ரீ **பண்டிதமணி, கதிரேசன் செட்டியாரவர்கள்** 24—4—21*ல் எழுதியது :-*

'**(அகலிகை வெண்பாவைப்)** *படித்து இன் புற்றேன். அது சிறிய உருவத்தில் பெரிய தெள்ளிய ஒளியை அடக்கித்திகழும் விலை மதிக் கொணு ஓர்* **அரும்பெரும் இரத்தினம்** *போல் விளங்குகின்றது. படிக்குங்கால் பண்டை முத் தொள்ளாயிர முதலிய வெண்பாக்களின் ஞாப கத்தை அடிக்கடி உண்டாக்குகின்றது.* **மதுர மிக்க சொற்களும் ஆழ்ந்த பொருணுட்பங் களும் அறப்பகுதிகளை எடுத்துக்காட்டும் அழ கும்** *படிக்குந்தோறும் மனத்தை* **மிகவும் இன் புறுத்துகின்றன.** *முதனூலினின்றும் கதை நிகழ்சியின் சில பகுதிகளை உசிதமாக மாற்றியது, மக்கள் நன்னெறிப்படுதற்கு மிகவும் ஏற்புடைத் தாகும்.*

'**தங்கள் அதுல கவித்துவ சக்தி தமிழின் பெருமையை இந்நாளில் தலைகாத்துச் சிறப் புச் செய்கின்றதெ**ன்*பதில் ஐயமின்று*'.

கிரந்தைக் கவியரசு, திரு. R. வேங்கடா சலம் பிள்ளை அவர்கள் (Professor of

Tamil, Rajah's College, Tiruvadi) 27—11—1938-ல் *எழுதியது:—*

'*அகலிகை வெண்பா எனும்* அருந்தமிழ் அமிழ்தம் .... தமிழ் கற்பார் ஒவ்வோருவரும் படித்தற்குரிய அரிய நூல்......... *அவர்கள் (மாணவர்கள்) தங்கள் வெண்பாவினை, யான் உணர்த்த உணர்ந்து ஒருவர் ஒருவராக விடாது பயின்று மகிழ்ந்துவருகின்றார்கள்.*' (*அடிக்கோடு, பிள்ளை அவர்களுடையது.*)

'செந்தமிழ்' தொகுதி 35, 474-ம் பக்கம்:- சொற்பொருளணி நலந்தோய்ந்து *கற்பார்க்கெல்லாம்* கழிமகிழ் பயப்பது; *அரிய பல ஆங்கில நூற் கருத்துக்களை இடை இடையே கொண்டு விளங்குவது. இயற்கையழகை உள்ளவாறு தெள்ளிதின் விளக்கும் பல வருணனைகளையும் அவ்வவ் வமயங்களுக்கேற்ற பெற்றியான் அமைந்த மெய்ப்பாடுகளைப் புலப்படுக்கும் கதாபாத்திரங்களின் கூற்றுக்களையுமுடையது.*

இதனால், முதலியாரவர்களுடைய பாரகாவியமியற்றவல்ல கவித்வ சக்தியும், உரையும், வசனமும் சிறக்கவெழுதும் ஆற்றலும் *நன்கு விளங்கும்.* இந்நூல் இருபத்தைந் தாண்டுகளுக்குள்

மும்முறை பதிக்கப்பட்டிருப்பதே இதன் அருமை பெருமைகளை யெல்லாம் விளக்கப் போதியதாகும்.

M. R. Ry. N. Kandaswamy Pillai Avl., Secretary, Karandai Tamil Sangam, Tanjore—*wrote on 1st December 1938* :—

The best in the east and in the west, the author has studied and has made them his own; by noble experiences and cultured company, he understands the working and counterworkings of human mind and heart; further the most delicate and tender emotions find *the most refined expressions in his pen.*

My ambition is the poem should find a permanent place in the current literature of the world. (*Italics Editor's*)

4, 5 இலக்கப் புத்தகங்கள் கையிருப்பில்லை.

மற்றைய புத்தகங்கள் கிடைக்குமிடம்:

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

லிமிட்டெட்

திருநெல்வேலி & சென்னை.

கிடைக்குமிடம்:

தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
லிமிடெட்

கீழ ரதவீதி, திருநெல்வேலி

ஷை கிளை நிலயம்:
6, பவளக்காரத் தெரு, சென்னை

All Rights Reserved by the Author
1939

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி